# ஜாலான் மஸ்ஜிட் இந்தியா

## வருகை புரிவதற்கு பாதுகாப்பானதாக உள்ளது



**நமது நிருபர்**

கோலாலம்பூர், செப்.12- மண்சரிவு ஏற்பட்டு இந்தியாவைச் சேர்ந்த ஒரு பெண் கடந்த மாதம் 23ஆம் தேதி மண்ணுக்குள் புதையுண்ட விசாரணை அறிக்கையின்படி ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவின் கட்டடங்கள் மற்றும் பாதைகள் செல்வதற்குப் பாதுகாப்பாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த முடிவு கடந்த புதன்கிழமை நடைபெற்ற மஸ்ஜிட் இந்தியா மண்சரிவு சம்பவத்திற்கான சிறப்புப் பணிக்குழு கூட்டத்தில் தாக்கல் செய்யப்பட்டதாக கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் பெருநிறுவன திட்டமிடல் துறை ஊடக பிரிவு தெரிவித்தது.

மாநகர் மன்றத்தின் திட்ட நிர்வாகத்திற்கான நிர்வாக இயக்குநர் முகமட் ஹமிம் தலைமையில் நடத்தப்பட்ட இக்கூட்டத்தில் பொதுப்பணித்துறை, கனிமங்கள் மற்றும் புவியியல் துறை (ஜேஎம்ஜி), தேசிய போலீஸ் படை, மலேசியத் தீயணைப்பு மீட்புத் துறை, இண்டா வாட்டர் நிறுவனம் (ஐடபள்யூகே), மலேசிய நில அளவை மற்றும் வரைபடத் துறை (ஜுபெம்), மலேசியப் பொறியியலாளர் கழகம் (ஐஇஎம்), மலேசிய புவி தொழில்நுட்ப அமைப்பு (எம்ஜிஎஸ்) ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் அனைத்து நிறுவனங்களும் தத்தம் அறிக்கைகளைச் சமர்ப்பித்தன. அந்த அறிக்கைகளின்படி மண்சரிவு சம்பவம் உள்ளூர்மய அம்சத்தைக் கொண்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நடப்பிலுள்ள புவியியல் தகவல் மற்றும் நில விசாரணைப் பதிவின்படி சம்பவம் நிகழ்ந்த இடம் 'கென்னி ஹில்ஸ்' உருவாக்கத்தில் வைக்கப்பட்டுள்ளது. அது பொதுவாக ஸ்கிஸ்ட், பைலைட் மற்றும் குவார்ட்சைட் பாறைகளின் அடுக்குகளைக் கொண்டுள்ளது என்று ஓர் அறிக்கையில் மாநகர் மன்றம் குறிப்பிட்டது.